059/DD/20

T.C-130

| Register Number | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|

# DEPARTMENTAL EXAMINATIONS

## DEPARTMENTAL TEST FOR APPOINTMENT AS ASSISTANT AUDIT OFFICERS IN THE AUDIT WING OF THE HINDU RELIGIOUS AND CHARITABLE ENDOWMENTS (ADMN.) DEPARTMENT – PART – II (a) ACCOUNTS AND AUDIT OF HINDU RELIGIOUS INSTITUTIONS (THEORY & PRACTICAL)

(Without Books)

Maximum Time : 2 hours

Maximum Marks : 80

***IMPORTANT INSTRUCTIONS***

**OBJECTIVE TYPE**

கொள்குறி வகை வினாத்தாள்

**Read the following instructions carefully before beginning to answer the questions.**
வினாக்களுக்கு விடையளிக்க தொடங்கும் முன்பு கீழ்க்கண்ட அறிவுரைகளை கவனமாக படிக்கவும்.

NB : **Words of masculine gender in these instructions shall, where the context so require, be taken to include feminine gender.**
இந்த அறிவுறுத்தலில் ஆண் பாலினரின் வார்த்தைகளில், சூழலுக்கேற்ப தேவைப்படின் பெண் பாலினரின் வார்த்தைகளும் அடங்கும்.

**This booklet should not be opened till the Invigilator gives a signal to open it. As soon as the signal is received you should open the booklet and then proceed to answer the questions.**
இந்த வினாத்தொகுப்பினை கண்காணிப்பாளரின் அனுமதி பெறுவதற்கு முன்னர் திறக்ககூடாது. கண்காணிப்பாளர் வினாத்தொகுப்பினை திறப்பதற்கு அனுமதி அளித்தவுடன் வினாத்தொகுப்பினை திறந்து விடையளிக்க தொடங்கலாம்.

1. This question booklet contains 80 number of objective type questions. Prior to attempting to answer, the candidate is requested to check whether all questions are there and ensure that there are no blank pages in the question booklet. In case, if any defect is noticed in the question paper, it shall be reported to the Invigilator immediately, **within first 10 minutes** after which no request will be entertained.

   இவ்வினாத்தாள் 80 கொள்குறி வகை வினாக்களை கொண்டது. விண்ணப்பதாரர்கள் விடையளிக்க தொடங்கும் முன், வினாத்தாளில் எல்லா வினாக்களும் இடம் பெற்றுள்ளனவா என்பதையும், ஏதேனும் சில பக்கங்கள் / வினாக்கள் அச்சிடப்படாமல் விடுபட்டுள்ளனவா என்பதையும் சரிபார்த்துக் கொள்ளவும். வினாத்தாளில் ஏதேனும் குறை இருப்பின் வினாத்தாளைப் பெற்ற பின் பத்து நிமிடங்களுக்குள் அறை கண்காணிப்பாளரிடம் தெரிவிக்க வேண்டும். அதற்கு பிறகு தெரிவிக்கப்படும் கோரிக்கைகள் ஏதும் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

2. Answer all questions. All questions carry equal marks.

   அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க வேண்டும். அனைத்து வினாக்களும் சமமான மதிப்பெண்கள் கொண்டவை.

[Turn over

3. Candidate must write his Register Number in the space provided on the top right side of this booklet alone. Do not write anything else on the Question Booklet.

விண்ணப்பதாரரின் பதிவெண்ணை இவ்வினாத்தாளின் மேல் வலது பக்கத்தில் அதற்கென ஒதுக்கப்பட்டுள்ள இடத்தில் எழுத வேண்டும். வினாத்தாளில் வேறு எதையும் எழுதக் கூடாது.

4. The sheet before the last page of the question booklet shall be used for any rough work.

வினாத்தாளின் கடைசி பக்கத்திற்கு முன் பக்கத்தில் rough work எழுதி பார்க்க உபயோகித்துக் கொள்ளவும்.

5. (a) Each question comprises of four responses i.e. (A), (B), (C) and (D). Candidate shall select only one correct response. In case, if the candidate feels that there are more than one correct response, **shade the response which he considers is the best.**

(b) In any case, a candidate shall choose only one response for each question.

(c) **If more than one answer is shaded for a question, the answer will be treated as wrong and no mark will be given for that question.**

(d) The total marks will depend on the total number of correct responses marked in the OMR answer sheet. (For this purpose, only one shaded circle for a question will be taken into account for awarding mark)

(a) ஒவ்வொரு வினாவிற்கும் (A), (B), (C), (D) என நான்கு விடைகள் கொடுக்கப்பட்டுள்ளது. விண்ணப்பதாரர் அவற்றில் ஏதேனும் ஒரு சரியான விடையைத் தேர்வு செய்ய வேண்டும். ஒன்றுக்கு மேற்பட்ட சரியான விடைகள் ஒரு வினாவிற்கு இருப்பதாக கருதினால், **அவற்றில் எவ்விடை மிகச் சரியானது என கருதுகிறீர்களோ, அவ்விடையை நிழலிட்டு காட்ட வேண்டும்.**

(b) எவ்வாறிருப்பினும், ஒரு வினாவிற்கு ஒரே ஒரு விடையைத் தான் தேர்ந்தெடுக்க வேண்டும்.

(c) **ஒரு வினாவிற்கு ஒன்றுக்கு மேற்பட்ட வட்டங்களில் விடையளிக்கப்பட்டிருந்தால் அவ்விடை தவறானதாக கருதப்பட்டு, அவ்வினாவிற்கு மதிப்பெண் வழங்கப்படமாட்டாது.**

(d) OMR விடைத் தாளில் குறிக்கப்பட்ட சரியான விடைகளைப் பொறுத்து, மொத்த மதிப்பெண்கள் வழங்கப்படும் (ஒரு வினாவிற்கு ஒரு வட்டத்தில் (குறிப்பிட்ட) நிழலிட்ட விடை மட்டுமே மதிப்பெண் வழங்க கணக்கில் எடுத்துக் கொள்ளப்படும்).

6. Do not mark the answers in the Question Booklet.

வினாத்தாளில் விடைகளைக் குறிப்பிடக் கூடாது.

7. Candidate shall not remove or tear off any sheet from this question booklet. During the examination he is not allowed to take the question booklet out of the examination hall. Only after the examination is over, he shall be allowed to take the question booklet.

விண்ணப்பதாரர், வினாத்தாளின் எந்த ஒரு பக்கத்தையும், நீக்கவோ அல்லது கிழிக்கவோ கூடாது. தேர்வு நடைபெறும் போது, வினாத்தாளை தேர்வு கூடத்தைவிட்டு வெளியே எடுத்து செல்ல அனுமதி கிடையாது. தேர்வு முடிந்த பின்னரே வினாத்தாளை எடுத்துச் செல்ல அனுமதிக்கப்படுவர்.

8. Failure to comply with any of the above instructions will render you liable to such action or penalty as the Commission may decide.

மேற்கண்ட அறிவுரைகளில் ஏதேனும் மீறப்படுமேயானால் தேர்வாணையம் எடுக்கும் தண்டனை / நடவடிக்கைக்கு உள்ளாக நேரிடும்.

9. In case of doubt, English version is the final.

வினாக்களில் சந்தேகமிருப்பின், ஆங்கில வடிவில் கொடுக்கப்பட்டுள்ள வினாக்களே இறுதியானது.

1. Increments of temple employees should be give one of within how many quarters?

(A) 4 Quarters
(B) 3 Quarters
(C) 5 Quarters
(D) 2 Quarters

திருக்கோயில் பணியாளர்களுக்கு வழங்கப்படும் வருடாந்திர ஊதிய உயர்வுகள் இவற்றுள் எத்தனை காலாண்டுகளுள் ஒன்றாக இருக்க வேண்டும்?

(A) 4 காலாண்டுகளுள்
(B) 3 காலாண்டுகளுள்
(C) 5 காலாண்டுகளுள்
(D) 2 காலாண்டுகளுள்

2. Which one is capital account?

(A) Land lease
(B) Hundiyal income
(C) Deposits
(D) Building rent

கீழ்காண்பவற்றில் மூலதன கணக்கில் வருவது

(A) நிலக்குத்தகை
(B) உண்டியல் வரவு
(C) வைப்புத்தொகை
(D) கட்டிட வாடகை

3. The authority competent to order write off the irrecoverable amount exceeding Rs. 500/– but not exceeding Rs. 1,000/- in the case of any Religious institution shall be

(A) The Government
(B) The Joint Commissioner
(C) The Commissioner
(D) The Assistant Commissioner

திருக்கோயில்களின் வரப்பெறா தொகைகள் ரூ. 500/– க்கு அதிகமாகவும் ரூ. 1,000/– க்கு குறைவாகவும் உள்ள தொகையினை தள்ளுபடி செய்ய அதிகாரம் படைத்தவர்

(A) அரசாங்கம்
(B) இணை ஆணையர்
(C) ஆணையர்
(D) உதவி ஆணையர்

4. If an employee's basic salary is Rs. 19,850/+ grade pay Rs. 4,300/- on 20.04.2015, then he got promotion on 25.04.2015. His scale of pay is Rs. 9,300-34,800/- + grade pay Rs. 4,300/-. In his promotion stage his scale of pay is Rs.9,300-34800/- + grade pay is Rs. 4800/-. His regular increment comes on 01.07.2015 and he opt to fix his pay on promotion on after his regular increment. Now what is his pay fixation after his regular increment on his promotion?

(A) Rs. 25,170/– (B) Rs. 25,130/–
(C) Rs. 26,130/– (D) Rs. 27,130/–

ரூ. 9300–34800/- + தர ஊதியம் ரூ. 4,300/– ல் உள்ள ஒருவர் 20.04.15 ல் அடிப்படைச் சம்பளம் ரூ. 19,850/– + த.ஊ. 4300/– பெற்று வரும் நிலையில் அவருக்கு 25.04.15 ல் பதவி உயர்வு அளிக்கப்பட்டு ரூ. 9300–34800/– + தர ஊதியம் ரூ. 4,800/– உள்ள நிலைக்கு உயர்த்தப்படுகிறார். அவரது வருடாந்திர ஊதிய உயர்வு நாள் 01.07.2015 ஆகும். அவர் வழக்கமான வருடாந்திர ஊதிய உயர்வு பெற்றுக்கொண்டு பதவி உயர்வில் ஊதியம் நிர்ணயம் செய்து தர கோரும் பட்சத்தில் அவருக்கு 01.07.2015 ல் நிர்ணயிக்கப்படும் ஊதியம் எவ்வளவு?

(A) ரூ. 25,170/– (B) ரூ. 25,130/–
(C) ரூ. 26,130/– (D) ரூ. 27,130/–

5. Form No.85 is used for

(A) Postage Stamp Account (B) Suit Register
(C) Register of Advances (D) Loans Register

படிவம் 85 ன் படி உள்ள பதிவேடு

(A) அஞ்சல் தலை இருப்பு பதிவேடு (B) வழக்குப் பதிவேடு
(C) முன்பணங்கள் பதிவேடு (D) கடன்கள் பதிவேடு

6. Which one is not a capital account?

(A) Fixed Deposits (B) Advances
(C) Deposits (D) Building rent

கீழ்காண்பவற்றில் மூலதன கணக்கில் வராதது எது?

(A) நிலையான வைப்பு (B) முன்பணங்கள்
(C) வைப்புத் தொகைகள் (D) கட்டிட வாடகை

7. According HR and CE Act 1959, Rules under Section 116(2)(XIII) how many days before the notice of auction of all leases shall be published

(A) 30 days before (B) 45 days before

(C) 15 days before (D) 60 days before

1959 ஆம் ஆண்டு அறநிலையங்கள் சட்டம் 116(2) (XIII) ன் கீழுள்ள விதிகளின்படி ஏலங்கள் குறித்து எத்தனை நாட்களுக்கு முன்பாக விளம்பரங்கள் செய்யப்படல் வேண்டும்?

(A) 30 நாட்களுக்கு முன்பு (B) 45 நாட்களுக்கு முன்பு

(C) 15 நாட்களுக்கு முன்பு (D) 60 நாட்களுக்கு முன்பு

8. If the opening balance of an Institution's Deposit Rs.23,54,987/-, income of current fasali's Deposits are Rs.17,32,486/-, and expense to adjust as Leases Rs.20,34,867/-, refund of deposits Rs.4,87,429/- then what is the closing balance of its deposits at the end of the fasali year?

(A) Rs.15,56,717/- (B) Rs.16,54,771/-

(C) Rs.15,65,177/- (D) Rs.16,45,177/-

ஒரு திருக்கோயிலில் ஆரம்ப வைப்புத்தொகை ரூ. 23,54,987/– நடப்பு பசலியில் வைப்புத்தொகை வரவு ரூ. 17,32,486/–, உரிமைக் குத்தகைக்கு ஈடு செய்தது ரூ. 20,34,867/– வைப்புத்தொகை திருப்பியது ரூ. 4,87,429/– எனில் பசலி இறுதியில் அத்திருக்கோயிலில் உள்ள வைப்புத் தொகை எவ்வளவு?

(A) ரூ. 15,56,717/– (B) ரூ. 16,54,771/–

(C) ரூ. 15,65,177/– (D) ரூ. 16,45,177/–

9. According HR&CE Act 1959, Rules under Section 116(2)(XIll) if no such order exercising the power of veto is received by the executive authority of institution within how many days from the date of auction the executive authority shall confirm the lease?

(A) within 60 days (B) within 90 days

(C) within 45 days (D) within 30 days

1959 ஆம் ஆண்டு அறநிலையங்கள் சட்டம் 116(2)(XIII) ன் கீழுள்ள விதிகளின்படி எத்தனை நாட்களுக்குள் ஆணையரின் ரத்து அதிகாரத்தின்படி உத்தரவு கிடைக்கப்பெறவில்லையெனில் குத்தகை உறுதி செய்யப்பட வேண்டும்?

(A) 60 நாட்களுக்குள் (B) 90 நாட்களுக்குள்

(C) 45 நாட்களுக்குள் (D) 30 நாட்களுக்குள்

10. The amount which lease stipulating an annual rental or contract shall be reported to the Commissioner is

(A) Rs.10,000/- or more
(B) Rs.5,000/- or more
(C) Rs.20,000/- or more
(D) Rs.1,000/- or more

ஏலத்தொகை கேட்பு ஆண்டிற்கு எவ்வளவு தொகை இருப்பின் ஆணையருக்கு தெரியபடுத்துதல் வேண்டும்?

(A) ரூ. 10,000/– அல்லது அதற்கும் மேல்
(B) ரூ. 5,000/– அல்லது அதற்கும் மேல்
(C) ரூ. 20,000/– அல்லது அதற்கும் மேல்
(D) ரூ. 1,000/– அல்லது அதற்கும் மேல்

11. If general income of institution is Rs.2,55,000/-, deposits Rs.50,000/-, investment realised is Rs.1,00,000/- opening cash balance Rs.5,600/- bank opening balance Rs.75,000/- and the general expenditure is Rs.75,000/- revision of deposits Rs.40,000/-, reinvestment Rs.80,000/- closing balance is Rs.45,000/- then what amount maybe made new investment?

(A) Rs.2,23,600/-
(B) Rs.2,43,600/-
(C) Rs.2,45,600/-
(D) Rs.2,55,600/-

பொதுக்கணக்கு சாதாரணம் வரவு ரூ. 2,55,000/–, வைப்புத்தொகை வரவு ரூ. 50,000/– முதலீடு திரும்ப வரவு ரூ. 1,00,000/– ஆரம்ப ரொக்க கையிருப்பு ரூ. 5,600/– ஆரம்ப வங்கி இருப்பு ரூ. 75,000/– பொதுக்கணக்கு சாதாரணம் செலவு ரூ. 75,000/–, வைப்புத்தொகை திருப்பியது ரூ. 40,000/– மறுமுதலீடு ரூ. 80,000/– முடிவு இருப்பு ரூ. 45,000/– எனில் புதிய முதலீடு எவ்வளவு செய்யப்பட்டது?

(A) ரூ. 2,23,600/–
(B) ரூ. 2,43,600/–
(C) ரூ. 2,45,600/–
(D) ரூ. 2,55,600/–

12. The Chairman of the Advisory Committee constituted by the government shall be

(A) Commissioner
(B) The Chief Minister
(C) Joint Commissioner
(D) The Minister of HR & CE

அரசு ஆலோசனைக் குழுவின் தலைவர்

(A) அற நிலையத்துறை ஆணையர்
(B) முதலமைச்சர்
(C) இணை ஆணையர்
(D) அறநிலையத்துறை அமைச்சர்

13. If an Institution's opening balance of Loans to be collection is Rs.23,54,987/-, Collection of current fasali's loans are Rs.17,32,486/-, and to gave loans to other institutions Rs.20,34,867/-, to gave staffs loans Rs.4,85,000/- then what is the net balance of its loans to be collect at the end of the fasali year?

(A) Rs.31,42,368/-
(B) Rs.32,41,386/-
(C) Rs.34,21,683/-
(D) Rs.33,86,421/-

ஒரு திருக்கோயிலில் வசூலிக்க வேண்டிய கடன்களின் ஆரம்ப நிலுவை தொகை ரூ. 23,54,987/–, நடப்பு பசலியில் வசூலிக்கப்பட்ட தொகை ரூ. 17,32,486/–, பிற திருக்கோயில்களுக்கு கடன் வழங்கியது ரூ. 20,34,867/–, சிப்பந்திகளுக்கு வழங்கிய கடன் ரூ. 4,85,000/– எனில் பசலி இறுதியில் அத்திருக்கோயிலின் வசூலிக்கப்பட வேண்டிய கடன் தொகை எவ்வளவு?

(A) ரூ. 31,42,368/–
(B) ரூ. 32,41,386/–
(C) ரூ. 34,21,683/–
(D) ரூ. 33,86,421/–

14. The form which is used for Deposit Refund voucher

(A) Form No.10
(B) Form No.12
(C) Form No.11
(D) Form No.13

வைப்புத் தொகை திருப்புதல் செலவுச்சீட்டுக்கான படிவம்

(A) படிவம் எண் 10
(B) படிவம் எண் 12
(C) படிவம் எண் 11
(D) படிவம் எண் 13

15. Institution means

(A) Temple and Specific Endowments attached to the Temple
(B) Maths only
(C) Educational Institutions which maintained by Temples
(D) Temple and Math

அறநிலையம் என்பது

(A) திருக்கோயில் மற்றும் அதனைச் சார்ந்த குறிப்பிட்ட கட்டளைகள்
(B) மடங்கள் மட்டும்
(C) திருக்கோயிலால் நிர்வகிக்கப்படும் கல்வி நிறுவனங்கள்
(D) திருக்கோயிலும் மடங்களும்

16. Form No.3 is used for

(A) Ledger

(B) Cash Book

(C) Miscellaneous Register

(D) Loans Register

படிவம் 3 ன் படி உள்ள பதிவேடு

(A) பேரேடு

(B) ரொக்கக் குறிப்பு புத்தகம்

(C) பலவகை கேட்பு பதிவேடு

(D) கடன்கள் பதிவேடு

17. The term of office of the members of the District Committee shall be

(A) One year

(B) Two years

(C) Three years

(D) Five years

அரசு அனுமதிக்கும் மாவட்டக் குழுவின் பணிக்காலம்

(A) ஓராண்டு

(B) இரண்டு ஆண்டுகள்

(C) மூன்று ஆண்டுகள்

(D) ஐந்து ஆண்டுகள்

18. Any person who continues to remain in the temple property even of the expiry of the lease shall be treated as

(A) owner of the property

(B) a leasee

(C) a mortgager

(D) an encroacher

வாடகை காலம் முடிந்தும் எவ்வித அதிகாரமுமற்ற நிலையில் இடத்தை அனுபவித்து வருபவரை எவ்வாறு அழைப்பது

(A) இடத்தின் உரிமையாளர்

(B) குத்தகைதாரர்

(C) அடமானதாரர்

(D) ஆக்கிரமிப்பாளர்

19. Fixing fees for the performance of any service in the religious institution is dealt under what section

(A) Section 56

(B) Section 78

(C) Section 86

(D) Section 57

அறநிறுவனங்களில் அர்ச்சனை கட்டணங்கள் நிர்ணயிக்கப்படுவது தொடர்பாக கீழ்க்கண்ட எந்த சட்டப்பிரிவு கூறுகிறது

(A) சட்டப்பிரிவு 56

(B) சட்டப்பிரிவு 78

(C) சட்டப்பிரிவு 86

(D) சட்டப்பிரிவு 57

20. How many days will give advance credit of earn leave in the earn leave account of a probation completed temple servant in every six months?

(A) 15 days (B) 30 days

(C) 25 days (D) 35 days

தகுதிகாண் பருவம் முடித்த திருக்கோயில் பணியாளர் ஒருவருக்கு அவருடைய ஈட்டிய விடுப்புக்கணக்கில் ஆறு மாதத்திற்கு ஒருமுறை எத்தனை நாட்கள் முன்வைப்பாக வைக்கப்படும்?

(A) 15 நாட்கள் (B) 30 நாட்கள்

(C) 25 நாட்கள் (D) 35 நாட்கள்

21. The temple expenditures are controlled by fixing standard scale of expenditure by the commissioner vide which of the following section

(A) Section 59 (B) Section 63

(C) Section 60 (D) Section 58

திருக்கோயில் செலவினங்கள் அவற்றின் வரவிற்கு ஏற்ப ஆணையரால் முறைப்படுத்துவதற்கான சட்டப்பிரிவு கீழ்க்கண்டவற்றுள் எது (standard scale of expenditure)

(A) சட்டப்பிரிவு 59 (B) சட்டப்பிரிவு 63

(C) சட்டப்பிரிவு 60 (D) சட்டப்பிரிவு 58

22. Under which section of HR & CE Act 1959, the authority competent shall pass the order of surcharge against trustees based on the defects disclosed in audit?

(A) section 90 (B) section 91

(C) section 92 (D) section 93

அறங்காவலர் மீது தணிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட குறைபாடுகள் மீது இந்த சமய அறநிலையத் துறையின் 1959 ம் ஆண்டு சட்டப் பிரிவின்படி எந்த பிரிவின் கீழ் நடவடிக்கை எடுக்க முடியும்?

(A) சட்டப்பிரிவு 90 (B) சட்டப்பிரிவு 91

(C) சட்டப்பிரிவு 92 (D) சட்டப்பிரிவு 93

23. Who shall be responsible for making proper arrangements for the safe custody of jewels and valuables?

(A) Superintendent (B) Accountant

(C) Executive Officer (D) Archakar

திருக்கோயில் நகைகள் மற்றும் விலையுயர்ந்த பொருட்கள்ள பாதுகாப்பாக வைப்பதற்கு முழு பொறுப்பானவர் யார்?

(A) கண்காணிப்பாளர் (B) கணக்காளர்

(C) செயல் அலுவலர் (D) அர்ச்சகர்

24. If the annual income of the Religious Institution not exceeds Rs.5,00,000.00 the rate of audit fees shall be

(A) 1.5% (B) 2.5%

(C) 4% (D) 11%

ஓர் அறநிறுவனத்தின் வருடாந்திர வருமானம் ரூ. 5,00,000.00 க்கும் மிகையாகாமல் இருக்கும்பட்சத்தில் அந்நிறுவனத்திற்கான தணிக்கைக் கட்டண விகிதம்

(A) 1.5% (B) 2.5%

(C) 4% (D) 11%

25. The delegation of powers to settle audit objections in respect of 46(ii) institutions vested with

(A) The Commissioner (B) The Joint Commissioner

(C) The Secretary of HR & CE (D) The Assistant Commissioner

பட்டியல் 46(ii)ஐ சார்ந்த அற நிறுவனங்களின் தணிக்கை மறுப்புகளை தீர்வு செய்யும் அதிகாரம் அளிக்கப்பட்டுள்ள அலுவலர்

(A) ஆணையர் (B) இணை ஆணையர்

(C) அறநிலையத்துறை செயலர் (D) உதவி ஆணையர்

26. If a probation completed employee upto how many days can take casual leave continuously at a time?

(A) 15 days (B) 10 days

(C) 12 days (D) 20 days

தகுதிகாண் பருவம் நிறைவு செய்த பணியாளர் ஒருவர் ஒரே சமயத்தில் தொடர்ந்து எத்தனை நாட்கள் தற்செயல் விடுப்பு எடுக்க முடியும்?

(A) 15 நாட்கள் (B) 10 நாட்கள்

(C) 12 நாட்கள் (D) 20 நாட்கள்

27. Under which section of HR & CE Act 1959, a Trustee or an E.O should get the sanction/approve of Dhittam register?

(A) section 56
(B) section 58
(C) section 57
(D) section 59

அறங்காவலர் அல்லது செயல் அலுவலர் 1959 ம் ஆண்டு இந்து சமய அறநிலையத் துறையின் எந்த சட்டப்பிரிவின்படி திட்டப்பதிவேடு தயாரித்து அங்கீகாரம் பெறப்பட வேண்டும்

(A) சட்டப்பிரிவு 56
(B) சட்டப்பிரிவு 58
(C) சட்டப்பிரிவு 57
(D) சட்டப்பிரிவு 59

28. The Dhittam Register of the Religious Institution has to be revised once in every

(A) 2 Years
(B) 5 Years
(C) 10 Years
(D) 3 Years

திருக்கோயில் திட்டப்பதிவேடு எத்தனை ஆண்டுகளுக்கு ஒருமுறை புதுப்பிக்கப்பட வேண்டும்?

(A) 2 ஆண்டுகள்
(B) 5 ஆண்டுகள்
(C) 10 ஆண்டுகள்
(D) 3 ஆண்டுகள்

29. Temple servants are eligible to draw periodical increments once in every

(A) 2 Years
(B) 3 Years
(C) 1 Year
(D) 6 months

திருக்கோயில் பணியாளர்களுக்கு காலமுறை ஊதிய உயர்வு ―――――― ஒரு முறை வழங்கலாம்.

(A) 2 ஆண்டுகளுக்கு
(B) 3 ஆண்டுகளுக்கு
(C) 1 ஆண்டுக்கு
(D) 6 மாதங்களுக்கு

30. Temple servants are eligible to draw earn leave surrender salary once in every

(A) 1 year
(B) 3 years
(C) 3 months
(D) 6 months

திருக்கோயில் பணியாளர்களுக்கு ஈட்டிய விடுப்பு ஒப்படைப்பு சம்பளம் ―――――― ஒரு முறை வழங்கலாம்.

(A) 1 ஆண்டுக்கு
(B) 3 ஆண்டுகளுக்கு
(C) 3 மாதங்களுக்கு
(D) 6 மாதங்களுக்கு

31. Temple servants are eligible to credit their earn leave in advance once in every

(A) 1 year
(B) 6 months
(C) 3 months
(D) 4 months

திருக்கோயில் பணியாளர்கள் தங்கள் கணக்கில் ஈட்டிய விடுப்பு முன்வைப்பாக ———————— ஒருமுறை சேர்க்கப்படும்.

(A) 1 ஆண்டுக்கு
(B) 6 மாதங்களுக்கு
(C) 3 மாதங்களுக்கு
(D) 4 மாதங்களுக்கு

32. The first account of the Religious institution is to be operated by

(A) the Executive Officer
(B) the Assistant Commissioner
(C) the Fit person or the Chairman Board of Trustees
(D) the Joint Commissioner

திருக்கோயில்களின் முதல் கணக்கினை இயக்கும் அதிகாரம் உள்ளவர்

(A) செயல் அலுவலர்
(B) சரக உதவி ஆணையர்
(C) தக்கார் அல்லது அறங்காவலர் குழு தலைவர்
(D) சரக இணை ஆணையர்

33. Under which section of HR&CE Act 1959, says about utilisation of the surplus funds?

(A) section 35
(B) section 36
(C) section 37
(D) section 34

இந்து சமய அறநிலையத் துறையின் 1959 ம் ஆண்டு சட்டப்படி எந்த சட்டப்பிரிவு திருக்கோயிலின் உபரி நிதியை பயன்படுத்துவது குறித்து விவரிக்கிறது?

(A) சட்டப்பிரிவு 35
(B) சட்டப்பிரிவு 36
(C) சட்டப்பிரிவு 37
(D) சட்டப்பிரிவு 34

34. What is the new invest amount of an institution if its opening balance is Rs.25,15,469.00, then its realized amount on maturity Rs.12,46,186.00 reinvestment is Rs.12,46,186.00 and its closing balance is Rs.37,42,567.00?

(A) Rs.12,27,098/-
(B) Rs.12,27,089/-
(C) Rs.12,27,298/-
(D) Rs.12,17,598/-

ஒரு திருக்கோயிலின் முதலீடுகளின் ஆரம்ப இருப்பு ரூ. 25,15,469.00, முதிர்வடைந்து திரும்ப வரவு ரூ. 12,46,186.00 மறுமுதலீடு ரூ. 12,46,186.00, முடிவு இருப்பு ரூ. 37,42,567.00 எனில் செய்யப்பட்ட புதிய முதலீடுகளின் தொகை எவ்வளவு?

(A) ரூ. 12,27,098/–
(B) ரூ. 12,27,089/–
(C) ரூ. 12,27,298/–
(D) ரூ. 12,17,598/–

35. The delegation of powers to settle audit objections in respect of non listed institutions vested with

(A) The Commissioner
(B) The Joint Commissioner
(C) The Secretary of HR&CE
(D) The Assistant Commissioner

பட்டியல் சாராத அறநிறுவனங்களின் தணிக்கை மறுப்புகளை தீர்வு செய்யும் அதிகாரம் அளிக்கப்பட்டுள்ள அலுவலர்

(A) ஆணையர்
(B) இணை ஆணையர்
(C) அறநிலையத்துறை செயலர்
(D) உதவி ஆணையர்

36. If a temple's annual rent demands opening balance is Rs.1,58,126/-, current demand is Rs.5,27,138/- then the collected amount in current demand is Rs.2,53,976/- and in final the over all closing balance is Rs.3,85,856/- then how much amount is collected in opening demand and what is the overall closing balance of opening balance?

(A) 45,432/– & 1,12,694/–
(B) 55,732/– & 2,12,694/–
(C) 2,53,976/– & 2,73,172/–
(D) 2,45,896/– & 2,75,874/–

திருக்கோயிலின் ஆண்டு வாடகை கேட்பின் ஆரம்ப நிலுவை ரூ. 1,58,126/–, நடப்பு கேட்பு ரூ. 5,27,138/– வசூலில் நடப்புக் கேட்பில் ரூ. 2,53,976/– வசூலிக்கப்பட நிலையில் இறுதி நிலுவை மொத்தம் ரூ. 3,85,856/– எனில் வசூலிக்கப்பட்ட ஆரம்ப நிலுவை பாக்கி தொகை மற்றும் இறுதியில் நிலுவையாக உள்ள பாக்கியின் தொகை எவ்வளவு?

(A) 45,432/– & 1,12,694/–
(B) 55,732/– & 2,12,694/–
(C) 2,53,976/– & 2,73,172/–
(D) 2,45,896/– & 2,75,874/–

37. Money value register maintained in the Form No.

(A) 29 (B) 22

(C) 24 (D) 30

பண மதிப்புள்ள பதிவேடுகள் பேணப்படும் படிவம்

(A) 29 (B) 22

(C) 24 (D) 30

38. Which of the following items shall be deducted for arrival of assessable income of a Religious Institution?

(A) Department Dues (B) Property tax

(C) Electricity Charges (D) Festival expenses

ஒரு திருக்கோயிலின் நிகர வருமானத்தை கணக்கிடுகையில் கீழ்கண்டவற்றில் கழிக்க வேண்டியது எது?

(A) துறைக் கட்டணங்கள் (B) சொத்து வரி

(C) மின் கட்டணங்கள் (D) திருவிழா செலவுகள்

39. Which one is correct about the special salary for festival duty to the temple servants?

(A) Basic pay only

(B) Pay and other wages

(C) Basic Pay and Grade Pay

(D) Specially Fixed Amount

திருக்கோயில் பணியாளர்களுக்கு வழங்கப்படும் திருவிழா சிறப்பூதியம் பின்வருவனவற்றுள் சரியானது எது?

(A) அடிப்படைச் சம்பளம்

(B) சம்பளம் மற்றும் இதர படிகள்

(C) அடிப்படைச் சம்பளம் மற்றும் தர ஊதியம்

(D) சிறப்பு நிர்ணய தொகை

40. How many days should work on festival duty in that particular year to get festival special salary for an employee?

(A) 100 days (B) 45 days

(C) 50 days (D) 60 days

திருக்கோயில் பணியாளர் ஒருவர் திருவிழா சிறப்பூதியம் பெற வேண்டுமெனில் அவர் அந்த குறிப்பிட்ட ஆண்டில் எத்தனை நாட்கள் திருவிழா பணிகள் செய்திருக்க வேண்டும்?

(A) 100 நாட்கள் (B) 45 நாட்கள்

(C) 50 நாட்கள் (D) 60 நாட்கள்

41. If the annual income of the temple is Rs.2,50,00,000/-, then the expenses allowed in liew of orukala pooja will be upto

(A) 2,000/– (B) 10,000/–

(C) 7,500/– (D) 5,000/–

ரூ. 2,50,00,000/– ஆண்டு வருவாய் பெறும் திருக்கோயிலுக்கு ஒருகால பூஜைக்கான செலவுக்காக அனுமதிக்கப்படும் தொகை எவ்வளவு?

(A) 2,000/– (B) 10,000/–

(C) 7,500/– (D) 5,000/–

42. If the annual income of the institution is Rs. 1,98,000/- then the expenses allowed in liew of orukala pooja will be upto

(A) 10,000/– (B) 5,000/–

(C) 7,500/– (D) 3,000/–

ரூ. 1,98,000/– ஆண்டு வருமானம் பெறும் ஒரு திருக்கோயிலுக்கு ஒருகால பூஜை செலவுக்காக அனுமதிக்கப்படும் தொகை எவ்வளவு?

(A) 10,000/– (B) 5,000/–

(C) 7,500/– (D) 3,000/–

43. The period of lease in respect of Kanikkai Hair collection in a Religious Institution shall be

(A) One year (B) Two years

(C) Six months (D) Three years

திருக்கோயிலில் விடப்படும் முடி சேகர உரிமைக்குத்தகை எத்தனை ஆண்டுகளுக்கு தொடர்ந்து விடப்பட வேண்டும்?

(A) ஓர் ஆண்டுக்கு (B) இரண்டு ஆண்டுகளுக்கு

(C) ஆறு மாதங்களுக்கு (D) மூன்றாண்டுகளுக்கு

44. The period of lease in respect of running a Prasadam stall in a Religious Institution shall be

(A) Two years (B) One Year

(C) Three years (D) Six months

திருக்கோயிலில் விடப்படும் பிரசாத கடை வைக்கும் உரிமைக்குத்தகை எத்தனை ஆண்டுகளுக்கு தொடர்ந்து விடப்பட வேண்டும்?

(A) இரண்டு ஆண்டுகளுக்கு (B) ஓர் ஆண்டுக்கு

(C) மூன்றாண்டுகளுக்கு (D) ஆறு மாதங்களுக்கு

45. The period of lease in respect of running Vehicle Toll Collection in a Religious Institution shall be

(A) Two years (B) One year

(C) Three years (D) Six months

திருக்கோயிலில் விடப்படும் வாகன சுங்க வசூல் உரிமைக்குத்தகை எத்தனை ஆண்டுகளுக்கு தொடர்ந்து விடப்பட வேண்டும்?

(A) இரண்டு ஆண்டுகளுக்கு (B) ஓர் ஆண்டுக்கு

(C) மூன்றாண்டுகளுக்கு (D) ஆறு மாதங்களுக்கு

46. The period of lease in respect of running Spiritual Book Store in a Religious Institution shall be

(A) Two years (B) One year

(C) Three years (D) Six months

திருக்கோயிலில் விடப்படும் ஆன்மிக புத்தக விற்பனை கடை உரிமைக் குத்தகை எத்தனை ஆண்டுகளுக்கு தொடர்ந்து விடப்பட வேண்டும்?

(A) இரண்டு ஆண்டுகளுக்கு (B) ஓர் ஆண்டுக்கு

(C) மூன்றாண்டுகளுக்கு (D) ஆறு மாதங்களுக்கு

47. The authority competent to order to approval of lease amount more than Rs. 1,000/- is

(A) The Commissioner (B) The Joint Commissioner

(C) The Assistant Commissioner (D) Inspector

திருக்கோயிலில் விடப்படும் குத்தகை இனங்களில் ரூ. 1,000/– க்கும் மேற்பட்ட தொகையுடையவை அங்கீகரிக்கும் அலுவலர் யார்?

(A) ஆணையர் (B) சரக இணை ஆணையர்

(C) சரக உதவி ஆணையர் (D) சரக ஆய்வர்

48. Remission of rent exceeding of __________ shall be granted by the Government.

(A) Rs. 10,000/– above 15,000 (B) Rs. 1,000/– above 3,000

(C) Rs. 5,000/– above 10,000 (D) Rs. 500/– above 1,000

அரசால் தள்ளுபடி செய்யப்படும் வாடகை கேட்பு தொகை

(A) ரூ. 10,000/– க்கு மேல் 15,000 (B) ரூ. 1,000/– க்கு மேல் 3,000

(C) ரூ. 5,000/– க்கு மேல் 10,000 (D) ரூ. 500/– க்கு மேல் 1,000

49. What is the paddy rate of Fasali -1425?

(A) Rs.1,328/- (B) Rs.1,490/-

(C) Rs.1,440/- (D) Rs.1,550/-

பசலி – 1425 க்கான நெல் விலை நிர்ணயம் எவ்வளவு?

(A) ரூ. 1,328/– (B) ரூ. 1,490/–

(C) ரூ. 1,440/– (D) ரூ. 1,550/–

50. Which one is correct salary if an employee got special grade on 01.05.2016 with his basic Rs.25,480/-(Rs.20,680/+ grade pay Rs.4,800/-) in the time scale of Rs.9,300-34,800/–+ grade pay Rs.4,800/-

(A) Rs.27,020/-
(B) Rs.28,020/-
(C) Rs.26,250/-
(D) Rs.27,220/-

ரூ. 9,300–34,800 காலமுறை ஊதியத்தில் ரூ. 4,800/– தர ஊதியம் பெறும் ஒருவரது சம்பளம் ரூ. 25,480/– (ரூ. 20,680/– + தர ஊதியம் ரூ. 4,800/–) எனில் 01.05.2016 ல் அவர் தேர்வு நிலை அடையும்போது அவருக்கு ஊதியம் உயர்வு செய்து நிர்ணயிக்கப்பட வேண்டிய மொத்த சம்பளம் எவ்வளவு?

(A) ரூ. 27,020/–
(B) ரூ. 28,020/–
(C) ரூ. 26,250/–
(D) ரூ. 27,220/–

51. Form No.14 is used for

(A) Investment Register
(B) Suit Register
(C) Register of Advances
(D) Loans Register

படிவம் 14 ன்படி உள்ள பதிவேடு

(A) முதலீடுகள் பதிவேடு
(B) வழக்குப் பதிவேடு
(C) முன்பணங்கள் பதிவேடு
(D) கடன்கள் பதிவேடு

52. Remission of rent amount of up to ———— shall be granted by the Commissioner.

(A) Rs.5,000 to 10,000/-
(B) Rs.500 to 1,000/-
(C) Rs.1,000 to 5,000/-
(D) upto Rs.500/-

ஆணையரால் தள்ளுபடி செய்யப்படும் வாடகை கேட்பு தொகை

(A) ரூ. 5,000 முதல் 10,000/–
(B) ரூ. 500 முதல் 1,000/–
(C) ரூ. 1,000 முதல் 5,000/–
(D) ரூ. 500/– வரை

53. Which of the following Form No. is used for as a Register of gold, silver and precious stones?

(A) Form No. 34
(B) Form No. 33
(C) Form No. 35
(D) Form No. 32

உண்டியலில் வரப்பெற்ற பொன், வெள்ளி மற்றும் நவரத்தின கற்கள் ஆகியவை பதியப்படும் நிரந்தர பதிவேட்டின் படிவம் எது?

(A) படிவம் எண் 34
(B) படிவம் எண் 33
(C) படிவம் எண் 35
(D) படிவம் எண் 32

54. The authority competent to order write off the irrecoverable amount exceeding Rs.1000/- but not exceeding Rs. 5,000 in the case of any Religious institution shall be

(A) The Government
(B) The Joint Commissioner
(C) The Commissioner
(D) The Assistant Commissioner

திருக்கோயில்களின் வரப்பெறா தொகைகள் ரூ. 1,000/– க்கு அதிகமாகவும் ரூ. 5,000/– மற்றும் அதற்கு குறைவாகவும் உள்ள தொகையினை தள்ளுபடி செய்ய அதிகாரம் படைத்தவர்

(A) அரசாங்கம்
(B) இணை ஆணையர்
(C) ஆணையர்
(D) உதவி ஆணையர்

55. If an Institution made Rs.15,37,582/- as new investment in its total income is Rs.65,48,293/-. Its deposits received is Rs.2,37,698/-, investment realised is Rs.5,12,359/-, advance collection is Rs.1,26,489/- and loan recollection is Rs.6,97,126/-. Then what amount is its general income?

(A) Rs.45,10,110/-
(B) Rs.49,74,621/-
(C) Rs.55,11,001/-
(D) Rs.50,10,011/-

ஓர் அறநிறுவனம் அதன் பொதுக் கணக்கு சாதாரணத்தின் வருவாயில் ரூ. 15,37,582/– புதிய முதலீடு செய்கிறது. அதன் மொத்த வருவாய் ரூ. 65,48,293/–, அதில் முறையே வைப்புத் தொகை வரவு ரூ. 2,37,698/–, முதலீடு திரும்ப வரவு ரூ. 5,12,359/– முன்பணம் வசூல் ரூ. 1,26,489/–, கடன் திரும்ப வரவு ரூ. 6,97,126/– எனில் அதன் பொதுக்கணக்கு வரவு எவ்வளவு?

(A) ரூ. 45,10,110/–
(B) ரூ. 49,74,621/–
(C) ரூ. 55,11,001/–
(D) ரூ. 50,10,011/–

56. The authority competent to order write off the irrecoverable amount not exceeding Rs.500/- in the case of any Religious institution shall be

(A) The Government (B) The Joint Commissioner

(C) The Commissioner (D) The Assistant Commissioner

திருக்கோயில்களின் வரப்பெறா தொகைகள் ரூ. 500/– க்குள் உள்ள தொகையினை தள்ளுபடி செய்ய அதிகாரம் படைத்தவர்

(A) அரசாங்கம் (B) இணை ஆணையர்

(C) ஆணையர் (D) உதவி ஆணையர்

57. The authority competent to order write off the irrecoverable amount of all other item of irregulars in the case of any Religious institution shall be

(A) The Government (B) The Joint Commissioner

(C) The Commissioner (D) The Assistant Commissioner

திருக்கோயில்களின் அனைத்து அளவிலான வரப்பெறா தொகைகளையும் தள்ளுபடி செய்ய அதிகாரம் படைத்தவர்

(A) அரசாங்கம் (B) இணை ஆணையர்

(C) ஆணையர் (D) உதவி ஆணையர்

58. The Property Register of the Religious Institution has to be revised once in every

(A) 3 Years (B) 5 Years

(C) 1 Year (D) 10 Years

திருக்கோயிலின் சொத்துப் பதிவேடு ____________ ஆண்டுகளுக்கு ஒருமுறை புதுப்பிக்கப்பட வேண்டும்.

(A) 3 ஆண்டுகள் (B) 5 ஆண்டுகள்

(C) 1 ஆண்டு (D) 10 ஆண்டுகள்

59. If an institutions general income is Rs.5,25,000/- its general expenditure is Rs.4,85,000/- and its as per its abstract general accounts opening balance is Rs.15,23,000/- then what is the closing balance of that institution's general account?

(A) Rs.15,63,000/- (B) Rs.14,63,000/-

(C) Rs.15,43,000/- (D) Rs.14,43,000/-

திருக்கோயிலின் பொதுக்கணக்கு சாதாரணம் வரவு ரூ. 5,25,000/– பொதுக்கணக்கு சாதாரணம் செலவு ரூ. 4,85,000/– சுருக்கப்பட்டியல்படி பொதுக்கணக்கு ஆரம்ப இருப்பு ரூ. 15,23,000/– எனில் பொதுக்கணக்கு சாதாரணம் இறுதி இருப்பு எவ்வளவு?

(A) ரூ. 15,63,000/– (B) ரூ. 14,63,000/–

(C) ரூ. 15,43,000/– (D) ரூ. 14,43,000/–

60. If an institutions general income is Rs.7,25,000/- its general expenditure is Rs.3,85,000/- and as per its abstract general accounts opening balance is Rs.17,52,000/- its opening balance deposits is Rs.10,25,450/- and deposits expenditure is Rs.7,35,000/- then what is the clossing balance of that institution's deposits?

(A) Rs.2,90,950/- (B) Rs.2,90,450/-

(C) Rs.4,53,750/- (D) Rs.3,95,540/-

திருக்கோயிலின் பொதுக்கணக்கு சாதாரணம் வரவு ரூ. 7,25,000/– பொதுக்கணக்கு சாதாரணம் செலவு ரூ. 3,85,000/– அதன் சுருக்கப்பட்டியல்படி பொதுக்கணக்கு ஆரம்ப இருப்பு ரூ. 17,52,000/– வைப்புத்தொகை ஆரம்ப இருப்பு ரூ. 10,25,450/– வைப்புத்தொகை செலவு ரூ. 7,35,000/– எனில் வைப்புத்தொகை இறுதி இருப்பு எவ்வளவு?

(A) ரூ. 2,90,950/– (B) ரூ. 2,90,450/–

(C) ரூ. 4,53,750/– (D) ரூ. 3,95,540/–

61. If an institutions general income is Rs.6,33,000/- its general expenditure is Rs.4,28,000/- and as per its abstract general accounts opening balance is Rs.9,43,000/- its opening balance fixed deposits is Rs.15,45,850/- and realised amount from fixed deposit is Rs.7,35,000/- and the total amount of fixed deposit made is Rs.13,25,750/- then what is the closing balance of that institution's fixed deposits?

(A) Rs.12,90,950/-
(B) Rs.21,49,450/-
(C) Rs.14,36,600/-
(D) Rs.21 36,600/-

திருக்கோயிலின் பொதுக்கணக்கு சாதாரணம் வரவு ரூ. 6,33,000/– பொதுக்கணக்கு சாதாரணம் செலவு ரூ. 4,28,000/– அதன் சுருக்கப்பட்டியல்படி பொதுக்கணக்கு ஆரம்ப இருப்பு ரூ. 9,43,000/– முதலீடு தொகை ஆரம்ப இருப்பு ரூ. 15,45,850/– முதலீடு திருப்பு வாங்கிய தொகை ரூ. 7,35,000/– நடப்பாண்டில் செய்யப்பட்ட மொத்த முதலீடுகள் ரூ. 13,25,750/– எனில் முதலீடுகளின் இறுதி இருப்பு எவ்வளவு?

(A) ரூ. 12,90,950/–
(B) ரூ. 21,49,450/–
(C) ரூ. 14,36,600/–
(D) ரூ. 21,36,600/–

62. What is the ratio of investments should be made as per G.O and Commissioner order in Govt. Finance Corporations?

(A) 40%
(B) 25%
(C) 35%
(D) 30%

மொத்த முதலீடுகளில் அரசாணை மற்றும் ஆணையர் சுற்றறிக்கைகள்படி அரசு நிதி நிறுவனங்களில் திருக்கோயில்கள் செய்யவேண்டிய முதலீடுகளின் விகிதாச்சாரம் எவ்வளவு?

(A) 40%
(B) 25%
(C) 35%
(D) 30%

63. What is the ratio of investments should be made as per latest G.O and Commissioner order in Nationalized and Sheduled Banks?

(A) 40%
(B) 25%
(C) 35%
(D) 30%

மொத்த முதலீடுகளில் அரசாணை மற்றும் ஆணையர் சுற்றறிக்கைகள்படி அரசு மற்றும் அட்டவணையிடப்பட்ட வங்கிகளில் திருக்கோயில்கள் செய்ய வேண்டிய முதலீடுகளின் விகிதாச்சாரம் எவ்வளவு?

(A) 40%
(B) 25%
(C) 35%
(D) 30%

64. What is the ratio of investments should be made as per G.O and Commissioner order in Co-operative Banks?

(A) 40% (B) 25%

(C) 35% (D) 30%

மொத்த முதலீடுகளில் அரசாணை மற்றும் ஆணையர் சுற்றறிக்கைகள்படி கூட்டுறவு வங்கிகளில் திருக்கோயில்கள் செய்ய வேண்டிய முதலீடுகளின் விகிதாச்சாரம் எவ்வளவு?

(A) 40% (B) 25%

(C) 35% (D) 30%

65. The delegation of powers to settle audit objections in respect of JC/EO 46(iii) institutions vested with

(A) The Commissioner (B) HR & CE Minister

(C) The Secretary of HR & CE (D) The Additional Commissioner

இணை ஆணையர்/செயல் அலுவலர் 46(iii) நிலையிலுள்ள அறநிறுவனங்களின் தணிக்கை மறுப்புகளை தீர்வு செய்யும் அதிகாரம் அளிக்கப்பட்டுள்ள 46(iii) அலுவலர்

(A) ஆணையர் (B) அறநிலையத் துறை அமைச்சர்

(C) அறநிலையத்துறை செயலர் (D) கூடுதல் ஆணையர்

66. Which of the following Form No. is used for as a Register of permanent Inventory?

(A) Form No. 34 (B) Form No. 33

(C) Form No. 35 (D) Form No. 32

நிரந்தர மதிப்புடைய நகைகள் மற்றும் இதர பொருட்கள் ஆகியவை பதியப்படும் நிரந்தர பதிவேட்டின் படிவம் எது?

(A) படிவம் எண் 34 (B) படிவம் எண் 33

(C) படிவம் எண் 35 (D) படிவம் எண் 32

67. What is the recent approved amount for One Hundred members of Annathana Scheme which implementing in Temples?

(A) Rs. 1,500/– (B) Rs. 2,000/–

(C) Rs. 2,500/– (D) Rs. 3,000/–

திருக்கோயில்களில் செயல்படுத்தப்படும் அன்னதான திட்டத்திற்கான நூறு நபர்களுக்கான அனுமதிக்கப்பட்ட தற்போதைய திட்ட தொகை எவ்வளவு?

(A) ரூ. 1,500/– (B) ரூ. 2,000/–

(C) ரூ. 2,500/– (D) ரூ. 3,000/–

68. The total income of an Institution is Rs.25,34,965/-, its total expense is Rs.8,42,367/-, its total opening balance is Rs.5,15,735/-, its total closing balance is Rs.2,19,648/-. Then what is the total investment made on that year?

(A) Rs.19,78,865/- (B) Rs.19,88,685/-

(C) Rs.18,19,879/- (D) Rs.19,68,685/-

ஒரு திருக்கோயிலின் மொத்த வருமானம் ரூ. 25,34,965/– மொத்த செலவுகள் ரூ. 8,42,367/–, ஆரம்ப இருப்பு மொத்தம் ரூ. 5,15,735/–, இறுதி இருப்பு மொத்தம் ரூ. 2,19,648/– எனில் நடப்பாண்டில் செய்யப்பட்ட மொத்த முதலீடு எவ்வளவு?

(A) ரூ. 19,78,865/– (B) ரூ. 19,88,685/–

(C) ரூ. 18,19,879/– (D) ரூ. 19,68,685/–

69. What is the paddy rate of Fasali -1424?

(A) Rs.1328/– (B) Rs.1490/–

(C) Rs. 1440/– (D) Rs.1550/–

பசலி – 1424 க்கான நெல் விலை நிர்ணயம் எவ்வளவு?

(A) ரூ. 1328/– (B) ரூ. 1490/–

(C) ரூ. 1440/– (D) ரூ. 1550/–

70. Under which section of HR & CE Act 1959, dealt about budgets related?

(A) section 85
(B) section 86
(C) section 87
(D) section 84

இந்து சமய அறநிலையத் துறையின் 1959 ம் ஆண்டு சட்டப் படி எந்த சட்டப்பிரிவு திருக்கோயிலின் வரவு செலவு திட்டம் குறித்து விவரிக்கிறது?

(A) சட்டப்பிரிவு 85
(B) சட்டப்பிரிவு 86
(C) சட்டப்பிரிவு 87
(D) சட்டப்பிரிவு 84

71. Which one of the following is correct about the Audit Fees of assessible income of Rs.84,64,982/- an Institution?

(A) Rs.3,45,899/-
(B) Rs.3,39,995/-
(C) Rs.3,54,989/-
(D) Rs.3,38,599/-

ரூ. 84,64,982/– நிகர வருமானமுள்ள ஒரு திருக்கோயிலின் கணக்கிடப்படும் தணிக்கைக் கட்டணம் எவ்வளவு?

(A) ரூ. 3,45,899/–
(B) ரூ. 3,39,995/–
(C) ரூ. 3,54,989/–
(D) ரூ. 3,38,599/–

72. Which one of the following is correct about the Contribution amount of assessible income of Rs.85,88,982/- an Institution?

(A) Rs.9,44,788/-
(B) Rs.9,39,898/-
(C) Rs.9,54,989/-
(D) Rs.9,38,988/-

ரூ. 85,88,982/– நிகர வருமானமுள்ள ஒரு திருக்கோயிலின் கணக்கிடப்படும் சகாயத் தொகை எவ்வளவு?

(A) ரூ. 9,44,788/–
(B) ரூ. 9,39,898/–
(C) ரூ. 9,54,989/–
(D) ரூ. 9,38,988/–

73. What is the contribution amount of Rs.1,45,825/- of assesseble income of a temple?

(A) 7850
(B) 8970
(C) 7980
(D) 8750

ரூ. 1,45,825/– நிகர வருமானமுள்ள ஒரு திருக்கோயிலின் கணக்கிடப்படும் சகாயத் தொகை எவ்வளவு?

(A) 7850
(B) 8970
(C) 7980
(D) 8750

74. What is the Audit Fees amount of Rs.1,98,825/- of assesseble income of a temple?

(A) 2892
(B) 2982
(C) 2298
(D) 2798

ரூ. 1,98,825/– நிகர வருமானமுள்ள ஒரு திருக்கோயிலின் கணக்கிடப்படும் தணிக்கைக் கட்டணம் எவ்வளவு?

(A) 2892
(B) 2982
(C) 2298
(D) 2798

75. If general income of an Institution is Rs.54,25,697/-, and ticket share given is Rs.1,48,673, the income of particular expense is Rs.27,498/-,the expense of particular expense is Rs.35,467/-, E.P.F contribution from employees is Rs.48,392/-, expense of E.P.F is Rs.36,456/-, oru kala pooja expense is Rs.1,27,468/-, recollection of EB bill is Rs.57,329/-, then what is the assesseble income of that Institution?

(A) 52,23,508/–
(B) 52,33,805/–
(C) 51,33,805/–
(D) 53,22,508/–

ஒரு திருக்கோயிலின் பொதுக்கணக்கு சாதாரணம் வருமானம் ரூ. 54,25,697/–, கட்டணச்சீட்டுப் பங்கு வழங்கியது ரூ. 1,48,673/–, குறிப்பிட்ட காரியத்திற்கு வரவு ரூ. 27,498/–, குறிப்பிட்ட காரிய செலவு ரூ. 35,467/– ஈ.பி. எஃப் பிடித்தம் ரூ. 48,392/–, ஈ.பி.எஃப் செலுத்தியது ரூ. 36,456/–, நித்திய படித்தரம் செலவு ரூ. 1,27,468/–, மின் கட்டணம் திரும்ப வரவு ரூ. 57,329/– எனில் அதன் நிகர வருமானம் எவ்வளவு?

(A) 52,23,508/–
(B) 52,33,805/–
(C) 51,33,805/–
(D) 53,22,508/–

76. If the total income of an Institution is Rs.45,68,169/-. total opening balance is Rs.4,36,598/-, and general expense is Rs.18,38,964/-, deposits refund is Rs.8,95,743/-, advance given Rs.65,000/-, investment made Rs.13,97,324/- then what is the total closing balance amount of that R & C?

(A) 7,08,363/–
(B) 8,07,736/–
(C) 8,36,077/–
(D) 8,77,036/–

ஒரு திருக்கோயிலின் தணிக்கை ஆண்டில் மொத்த வருமானம் ரூ. 45,68,169/–, மொத்த ஆரம்ப இருப்பு ரூ. 4,36,598/– செலவுகள் சாதாரணம் ரூ. 18,38,964/–, வைப்புத்தொகை திருப்பியது ரூ. 8,95,743/–, முன்பணம் வழங்கியது ரூ. 65,000/–, முதலீடுகள் செய்தது ரூ. 13,97,324/– எனில் அத்திருக்கோயிலின் அவ்வாண்டின் வரவு செலவு பட்டியல் படியான இறுதி மொத்த இருப்பு யாது?

(A) 7,08,363/–
(B) 8,07,736/–
(C) 8,36,077/–
(D) 8,77,036/–

77. The form which is used for Register of works

(A) Form No. 95
(B) Form No. 96
(C) Form No. 94
(D) Form No. 92

வேலைகளுக்கான (மராமத்து உட்பட) பதிவேடு அடங்கிய படிவம்

(A) படிவம் எண் 95
(B) படிவம் எண் 96
(C) படிவம் எண் 94
(D) படிவம் எண் 92

78. Form No. 9 is used for

(A) Auction Register
(B) Cash Book
(C) Miscellaneous Register
(D) Investment Register

படிவம் 9ன் படி உள்ள பதிவேடு

(A) ஏலப்பதிவேடு
(B) ரொக்கக் குறிப்பு புத்தகம்
(C) பலவகை கேட்பு பதிவேடு
(D) முதலீடு பதிவேடு

79. If the verification of jewels of an Institution in 1995 is Rs.85,96,102/-, its later addition verification was made on April -2015 is to Rs.68,98,285/-. Then in November-2015 Revalue and reestimate of its jewels is Rs.2,85,35,685/-. Then what is the latest value of its total jewels as per verification report?

(A) Rs.1,54,94,387/-

(B) Rs.2,85,35,685/-

(C) Rs.4,40,30,072/-

(D) Rs.68,98,285/-

ஒரு அறநிறுவனத்தின் நகைகள் 1995 ல் முதல் மதிப்பீடு செய்தபோது ரூ. 85,96,102/–க்கு மதிப்பிடப்பட்டது. பிறகு வரப்பெற்ற நகைகள் யாவும் ஏப்ரல் 2015 ல் பிற்சேர்க்கை மதிப்பீடு செய்ததில் ரூ. 68,98,285/– க்கு செய்யப்பட்டது. நவம்பர் 2015 ல் மறு மதிப்பீடு செய்யப்பட்டதில் ரூ. 2,85,35,685/– க்கு மதிப்பிடப்பட்டுள்ளது எனில் அந்நிறுவனத்தின் நகைகள் மதிப்பீடு அறிக்கைப்படி உள்ள நகைகளின் மொத்த மதிப்பீடு தொகை எவ்வளவு?

(A) ரூ. 1,54,94,387/–

(B) ரூ. 2,85,35,685/–

(C) ரூ. 4,40,30,072/–

(D) ரூ. 68,98,285/–

80. What is the paddy rate of Fasali -1423?

(A) Rs.1328/-

(B) Rs.1490/-

(C) Rs.1440/-

(D) Rs.1550/-

பசலி–1423 க்கான நெல் விலை நிர்ணயம் எவ்வளவு?

(A) ரூ. 1328/–

(B) ரூ. 1490/–

(C) ரூ. 1440/–

(D) ரூ. 1550/–

059/DD/20

| Register Number | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|

# DEPARTMENTAL EXAMINATIONS

# DEPARTMENTAL TEST FOR APPOINTMENT AS ASSISTANT AUDIT OFFICERS IN THE AUDIT WING OF THE HINDU RELIGIOUS AND CHARITABLE ENDOWMENTS (ADMN.) DEPARTMENT – PART – II (a) ACCOUNTS AND AUDIT OF HINDU RELIGIOUS INSTITUTIONS (THEORY & PRACTICAL)

(With Books)

Maximum Time : 30 minutes Maximum Marks : 20

## *IMPORTANT INSTRUCTIONS*

## DESCRIPTIVE TYPE
விரிவான விடையளிக்கும் வகை வினாத்தாள்

**Read the following instructions carefully before beginning to answer the questions.**

வினாக்களுக்கு விடையளிக்க தொடங்கும் முன்பு கீழ்க்கண்ட அறிவுரைகளை கவனமாக படிக்கவும்.

NB : **Words of masculine gender in these instructions shall, where the context so require, be taken to include feminine gender.**
இந்த அறிவுறுத்தலில் ஆண் பாலினரின் வார்த்தைகளில், சூழலுக்கேற்ப தேவைப்படின் பெண் பாலினரின் வார்த்தைகளும் அடங்கும்.

1. Answers in excess of the prescribed number of questions appearing at the end of the answer book will not be valued.

   விடைகளை குறிப்பிட்டுள்ள எண்ணிக்கைக்கு அதிகமாக எழுதியிருப்பின், விடைத்தாளின் இறுதியில் உள்ள அதிக எண்ணிக்கையிலான விடைகள் மதிப்பீடு செய்யப்படாது.

2. Answer should be in brief and to the point and need not be a verbatim reproduction of printed pages. (Applicable for tests to be answered "with books" only).
   விடைகள் சுருக்கமாகவும், வினாவிற்கு உரிய அளவிலும் இருக்க வேண்டும். புத்தகத்தில் உள்ளவற்றை அப்படியே வார்த்தைக்கு வார்த்தை திரும்ப எழுதக் கூடாது. (இக்குறிப்பு புத்தகங்களுடன் எழுதும் தேர்விற்கு மட்டும் பொருந்தும்)

3. In case of doubt, English version is the final.

   வினாக்களில் சந்தேகமிருப்பின் ஆங்கில வடிவில் கொடுக்கப்பட்டுள்ள வினாக்களே இறுதியானது.

[Turn over

**Answer any FOUR from the following Six questions.**

ஏதேனும் நான்கு வினாக்களுக்கு பின்வரும் ஆறு வினாக்களிலிருந்து விடையளிக்கவும்.

**(4 × 5 = 20)**

1. Write about a brief notes on Inspection of property and documents under Tamil Nadu Hindu Religious and Charitable Endowments – Act 1959.

   1959 ஆம் ஆண்டு, தமிழ்நாடு இந்து சமய அறநிலைய துறை சட்டப்படி சொத்துக்கள் மற்றும் பதிவேடுகள் மீதான ஆய்வு குறித்து குறிப்பு எழுதுக.

2. Write about the power to spend "Pathakanika".

   "பார காணிக்கை" செலவிடுதல் குறித்து குறிப்பு வரைக.

3. Write about Authority to whom audit report is to be submitted according to Tamil Nadu Hindu Religious and Charitable Endowments 1959.

   1959 ஆம் ஆண்டு இந்து சமய அறநிலைய துறை சட்டப்படி தணிக்கை அறிக்கைகள் யாருக்கு அனுப்பப்படல் வேண்டும்?

4. If an employee's credit opening balance of Earn Leave is on 03.12.2010 is 127 days. Then he took earn leave on 15.04.2011 – 17 days, on 23.06.2012 – 12 days, 12.10.2012 – 12 days, 07.05.2013 – 14 days, 04.03.2016 – 24 days. Then his 15 days earn leave surrender salary followed on 07th October on every year. Now calculate and find his total earn leave credit days on 30.06.2017.

   31.12.2010 ல் பணியாளர் ஒருவருடைய ஈட்டிய விடுப்பு கணக்கில் ஆரம்ப இருப்பு மொத்தம் 127 நாட்கள் உள்ளது. அதன் பிறகு இவர் 15.04.2011 ல் 17 நாட்கள், 23.06.2012 ல் 12 நாட்கள், 12.10.2012 ல் 12 நாட்கள், 07.05.2013 ல் 14 நாட்கள், 04.03.2016 ல் 24 நாட்கள் ஈட்டிய விடுப்பு துய்த்துள்ளார். இவருக்கு வருடம் தோறும் அக்டோபர் 7 ம் தேதியன்று 15 நாட்கள் ஈட்டிய விடுப்பு ஒப்படைப்பு சம்பளம் வழங்கப்பட்டுள்ளது. இவருடைய ஈட்டிய விடுப்பு கணக்கினை கணக்கிட்டு 30.06.2017 அன்று இவருடைய ஈட்டிய விடுப்பு கணக்கில் இருக்க வேண்டிய மொத்த ஈட்டிய விடுப்பு நாட்களை கணக்கிடுக.

5. Write about Contents of Audit Report (Sec 89 of Hindu Religious and Charitable Endowments Act 1959)

   (இந்து சமய அறநிலைய துறை சட்டம் 1959 –ன் பிரிவு 89–ன் படி) தணிக்கை அறிக்கையில் இடம் பெற வேண்டியவை குறித்து குறிப்பு வரைக?

6. List out the details of Assessment, Levy and Recovery of Contribution, Costs, ETC.

   திருக்கோயில்களில் வசூலிக்கப்படும் சகாயத்தொகையிலான நிகர வருமானத்தின் படி எத்தனை சதவீதம் என்பதை பட்டியலிடுக.

---